19.2.2021
அசல் வழக்கு எண்: 463/2012

வா.சா.1. ராஜகோபால் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 8, 9, மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

தாவாச் சொத்துக்கள் உள்ளிட்ட பூர்வீக சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தா பின்னத்தேவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பின்னத்தேவருக்கு அர்சுணத்தேவர், பால்சாமி தேவர் மற்றும் வீமத்தேவர் என்ற மூன்று மக்கள் என்றால் சரிதான். பின்னத்தேவர் 100 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 60 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். பின்னத்தேவர் இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளான அர்சுணத்தேவர், பால்சாமி தேவர் மற்றும் வீமத்தேவர் ஆகியோர்கள் சொத்துக்களை பாத்தியம் அடைந்து அனுபவம் செய்தனர் என்றால் சரிதான். அர்சுணத்தேவர், பால்சாமி தேவர் மற்றும் வீமத்தேவர் ஆகியோர்கள் அவர்களது காலத்தில் சொத்துக்களை வாய்கறாலாக பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் சரிதான். வீமத்தேவர் திருமணம் செய்யாமல் 45 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். வீமத்தேவரின் பங்கை அர்சுணத்தேவர், பால்சாமித்தேவரும் அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். அர்சுணத்தேவர் 1972ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. அர்சுணத்தேவரின் வாரிசுகள் சிவனாண்டி, செல்லப்பாண்டி, பால்துரை, அயோத்தி, கண்ணன் என்றால் சரிதான். சிவனாண்டி இறந்துவிட்டார். சிவனாண்டியின் வாரிசுகள் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். செல்லப்பாண்டி இறந்து விட்டார். செல்லப்பாண்டியின் வாரிசுகள் 14 முதல் 16 என்றால் சரிதான். செல்லப்பாண்டிக்கு தாரணி என்ற பெண் வாரிசு உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாரணி என்ற வாரிசு உள்ள நிலையில் அவரை தரப்பினராக சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 12, 13 பிரதிவாதிகள் இந்த வழக்கின் எதன் அடிப்படையில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் தாவாச் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சிப்பதால் அவர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன். தாவாச் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்தது சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செவிவழிச் செய்தி என்பதால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்போ, பின்போ சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பால்சாமி 1981ம் வருடம் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2000ம் வருடம் இறந்து விட்டார். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலும். எனது தகப்பனாருக்கு நானும், 11ம் பிரதிவாதியும் வாரிசுகள் என்றால் சரிதான். எனக்கு சகோதரிகள் யாரும் இல்லை. பூர்வீக

சொத்துக்கள் என்ன என்ன என்றும் அதன் சர்வே எண்கள் பற்றிய விபரமும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அர்சுணத்தேவருக்கும், பால்சாமி தேவருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர் தனித்தனியாக அனுபவம் செய்து வந்து வில்லங்கம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. அர்சுணத்தேவரும், பால்சாமி தேவரும் சொத்துக்களை பிரிவினை செய்து அவரவர் அனுபவம் செய்து வந்தனர் என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் மட்டும் பொதுவில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அர்சுணத்தேவர் மற்றும் பால்சாமி தேவருக்கு என்ன என்ன சொத்துக்கள் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களை மட்டும் பொதுவில் வைத்திருந்ததற்கு என்ன காரணம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதுகுறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்து 18 வருட காலத்தில் தாவாச் சொத்தைப்பொறுத்து எவ்வித ஆட்சேபனை எதுவும் செய்ய-வில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களின் விஸ்தீரணம் சுமார் 3 ஏக்கர் 89 செண்டு இருக்கும். தாவாச் சொத்துக்களைப்பொறுத்து எனது தகப்பனார் பெயரில் எந்த பட்டாவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவாச் சொத்துக்களுக்கு அர்சுணத்தேவர் பெயரில் தனித்து பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அர்சுணத்தேவர் பெயரிலான பட்டாவின் சர்வே எண்.148/1பி, அதன் விஸதீரணம் 0.06.0 ஏர்ஸ். சர்வே எண்.149/1பி, அதன் விஸதீரணம் 0.05.5 ஏர்ஸ். சர்வே எண்.149/20, அதன் விஸதீரணம் 0.06.5 ஏர்ஸ் சொத்துக்கள் கட்டுப்பட்டிருந்தது என்றும் மேற்படி சொத்துக்களும், தாவாச் சொத்துக்களும் அர்சுணத்தேவரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதால் தான் அவ்வாறாக பட்டா எண்.1368 ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 1 மற்றும் 3 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து எவ்வித விசாரணையும் இன்றி எனது பெயரிலும், சகோதரர் பெயரிலும் பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பட்டாவினை ஆட்சேபித்து பிரதிவாதிகள் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து எங்கள் பெயரை நீக்கி பிரதிவாதிகள் பெயரில் பட்டா வழங்க உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை ஆட்சேபித்து மதுரை மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் 80 வருடங்களாக அர்சுணத்தேவர் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது சகோதரரான 11ம் பிரதிவாதி என்னுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்ய மறுத்து விட்டார் என்றால் அவருக்கு உடல்நலம் சரியில்லாததால் என்னுடன் சேர்ந்து வழக்கை நடத்தவில்லை. எனது சகோதரருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது சம்பந்தமாக எனது பிராதிலோ, நிரூபண வாக்கு மூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சகோதரரான 11ம் பிரதிவாதி

உண்மை விபரங்களை அறிந்து வீண் விவகாரங்கள் செய்யக்கூடாதென விலகிக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது சகோதரரான 11ம் பிரதிவாதி தனியாக வழக்கறிஞரை நியமித்து எதிர்வாதம் செய்யவில்லை என்றால் எனது சகோதரர் இறந்து விட்டார். 11ம் பிரதிவாதி 2012ம் ஆண்டு இறந்துவிட்டார். 11ம் பிரதிவாதி இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. தாவாச் சொத்துக்கள் அர்சுணத்தேவருக்கு பாகத்தில் கிடைத்து, அவர் அனுபவம் செய்து வந்து, அவருக்கு பிறகு அவரது வாரிசுகள் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டு, அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். எனது தகப்பனார் பால்சாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு அவரது பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டு, அவருக்கு பிறகு எங்களது பெயரில் கூட்டுப்படா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் சர்வே எண்.164/2பி1 மஞ்சுளா என்பவருக்கு 20.06.1988ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 20.06.1988ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் எங்களுக்கு பூர்வீக பாத்தியமானதும், எங்களது தகப்பனாரின் (பால்சாமி) பாகத்திற்கு கிடைத்த சொத்துக்-களையும் கிரையம் செய்து கொடுத்துள்ளதாக சரத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 20.06.1988 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் கண்ட மஞ்சுளா என்பவரை எனக்கு தெரியாது. விற்பனை செய்த நபர்கள் நாங்கள் தான். தாவாச் சொத்துக்களில் கோரியுள்ள பங்கு விகிதம் தவறானது என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்களின் மதிப்பு குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்களின் நான்குமால் விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்து விட்டு, அர்சுணத்தேவரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் பாகம் இருப்பதாக பிரதிவாதிகள் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதற்கு எவ்வித ஆவணமும், தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

(12, 13 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).